செய்தி வெளியீடு எண் : 1010 நாள்: 21.11.08

**சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு முதல்முறையாக இலவச பேருந்து பயண அட்டைகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (21.11.2008) வழங்கினார்கள்.**

இயலா குழந்தைகள் பேச்சுத்திறன் பயிற்சியும், உடல் வள நலப்பயிற்சியும் பெறுவதற்கு தனியார் நிறுவனத்தால் நடத்தப்படும் பயிற்சி மையங்களுக்கு சென்று வர மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கும், அவர்களின் பெற்றோர் ஒருவருக்கும் பேருந்தில் பயணம் மேற்கொள்ள இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படும் என்றும், இச்செலவினத்தை சென்னை மாநகராட்சி ஏற்கும் என்றும் சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் துவக்கமாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று ( 21.11.2008 ) தலைமைச் செயலகத்தில் பேச்சுத்திறன் பயிற்சியும், உடல் வள பயிற்சியும் பெற உள்ள 22 மாணவர்களுக்கும், மாணவர்களுடன் பயிற்சி மையத்திற்கு சென்று வர அவர்களுடைய பெற்றோர் ஒருவருக்கும் இலவச பேருந்து பயண அட்டைகளை வழங்கினார்கள்.

சென்னை மாநகராட்சி பள்ளியில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களுடன், அவர்களது பெற்றோர்களும் மனவள பயிற்சி மையத்திற்கு சென்று பயிற்சிகள் அறிந்து மாணவர்கள் மனவள பயிற்சிகள் மேற்கொள்ள உறுதுணையாக அமைந்திடும் வகையில் பெற்றோர்களுக்கு சென்னை மாநகராட்சி இலவச பேருந்து பயண அட்டைகளை வழங்கியுள்ளது.

இதன் மூலம் உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்ற மாணவர்களுடன் சகஜமாக இணைந்து பழகும் நட்பு சூழல் ஏற்பட வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. முதல்முறையாக சென்னை மாநகராட்சியின் இந்த அரிய முயற்சிக்கு சென்னை மாநகராட்சி பள்ளியில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவ/ மாணவியர்கள், அவர்களின் பெற்றோர்கள் தமிழக அரசுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இதுவரை சென்னை மாநகராட்சி மூலம் 6397 பள்ளி மாணவ/மாணவியர்கள் உடல் ஊனமுற்றோர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக தகுதியானவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.என்.நேரு, சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலர் திரு கே.தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப.ரவி, நிலைக்குழுத்தலைவர்(கல்வி) திருமதி.கே.ஜானகி, துணை ஆணையர்(கல்வி) திருமதி.அனு ஜார்ஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * * * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9